ஆங்கிலவழிக் கல்வி) மாணவர் திறம்படச் செயல்பட்டுக் கற்றுக் கொள்வர். மாணவரின் வாழ்நாள் முழுமைக்கும் எழும் சிக்கல்களைக் களைதல் என்பது மாணவனை நாட்டிற்கு நற்குடிமகனாக உருவாக்குதல் எனும் சால்புடைய செயலாக அமையக்கூடியதாகும்.

**துணைநின்றவை**


- திருமலை, மா.சு., (1998), தமிழ் கற்பித்தல், சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
- கிருபானந்தன் க.வே., முதலியோர், (2009), கல்வியியலில் கணிணி, சென்னை: ஜி.வீ. பதிப்பகம்.
- முரளிதரன் இரா. & அருள்ராஜ் வே.சா., (2011), தமிழ் மொழி கற்பித்தலில் இன்றைய போக்குகள், தஞ்சாவூர்: நியூ விஷன் வெளியீட்டகம்.


******************

# காலந்தோறும் கற்றல், கற்பித்தல் Forever Learning and Teaching


## முனைவர் பா.கவிதா | Dr. P.Kavitha

தமிழ் - உதவிப்பேராசிரியர், பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோயம்புத்தூர், kavithapackiyam19@gmail.com, 7530016336, Assitant Professor of Tamil, PSGR Krishnammal College for Women, Coimbatore.

## முனைவர் ந.இராஜேந்திரன் | Dr. N.Rajendran

தமிழ் - உதவிப்பேராசிரியர், இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர், ilayavantamil@gmail.com, 9897536324. Assitant Professor of Tamil, Hindustan College of Arts and Science, Coimbatore.



**ஆய்வுச் சுருக்கம்**

ஒரு மாணவனின் 'அறிவுக் கண்ணைத் திறக்கும் திறவுகோல் கல்வி' இக்கல்வியைப் பொருள் கொடுத்தேனும் கற்க வேண்டும் என்ற நிலை மாறி 'பிச்சை எடுத்தேனும் கல்வியைக் கற்க வேண்டும்' என்பது சீவலமாறனின் வாக்கு.

அர்ப்பணிப்புத்தான் ஆசிரியரின் அடையாளம். ஒரு மாணவன் சமூகத்தின் மிக உயரிய பொறுப்புக்குப் போகலாம். ஆனால், ஆசிரியர் இறுதிவரை ஆசிரியராகவே இருப்பார். அந்த மாணவன் என் வளர்ச்சிக்குக் காரணம் இந்த ஆசிரியர்தான் என்றுரைக்கும்போது ஆசிரியரின் மனம் நிறைவடைகிறது. விருட்சமாக வளர்ந்து நிற்கும் ஒவ்வொரு மாணவனின் வாழ்விலும் ஓர் ஆசிரியர் விதையாகப் புதைந்து கிடக்கிறார் என்பதுதான் உண்மை. இத்தகு ஆசிரியரைத் தேடிச் சென்று கல்வி கற்ற காலம் கால ஓட்டத்தில் கரைந்துபோனது. இன்று மாணவர்களைத் தேடி ஆசிரியர்கள் வீடு வீடாகச் சென்று கல்வி கற்பிக்கும் நிலை தற்காலத்தில் உருவெடுத்துள்ளது. இத்தகைய கல்வி முறையில் கற்றல் கற்பித்தல் காலந்தோறும் கடந்து வந்த பாதையைத் தமிழ் இலக்கிய, இலக்கணங்கள் வாயிலாக வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**Abstract**

Education Provides Knowledge. Sivalamaran said that you might beg for education. Commitment is the symbol of a good teacher. A student may achieve and can be in the

highest position. In contrast, the teacher remains in the same position. If a successful student reminds that the teacher is responsible for the success, then that teacher feels proud and glad. Each successful student has a dedicated teacher behind their success. Searching for a good teacher is outdated; now, teachers search for responsible students and are ready to teach them at the doorstep. The current manuscript details the evolution of the learning and teaching methods based on the grammatical and literary evidence.

**திறவுச்சொற்கள் (KeyWords)**

காலந்தோறும் கற்றல் கற்பித்தல், கல்வி, முனைவர் பா.கவிதா, முனைவர் ந.இராஜேந்திரன், ஆதிகாலத்தில் கற்றல் கற்பித்தல், குருகுலக் கல்வி, தொல்காப்பியர் காலக் கற்றல் கற்பித்தல், ஆசிரியரும் மாணாக்கரும், சங்ககாலத்தில் கற்றல் கற்பித்தல், சங்கம் மருவிய காலத்தில் கற்றல் கற்பித்தல், இன்றைய கற்றல் கற்பித்தல்.

Forever Learning and Teaching, Education, Dr P.Kavitha, Dr N.Rajendran, Teaching learning in antiquity, Gurukul Education, Tolkappier term learning teaching, Teacher and student, Sangakala term learning teaching, Teaching learning in the Sangam Maruviyakala, Today's learning is teaching.

## முன்னுரை

'மாற்றம் ஒன்றே மாறாதது' என்பதற்கு இணங்க மக்களின் தேவைகளும் சிந்தனைகளும் காலத்திற்கு ஏற்ப மாறிவருகின்றன. அவ்வகையில் கால ஓட்டத்தில் மாணவர்களின் கற்றல், கற்பித்தலின் தேவைகளும் சிந்தனைகளும் மாறி வருகின்றன. பண்டைய தமிழகத்தில் கல்விக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. 'கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' எனவும், 'கல்லாதவன் மனம் இருளின் உறைவிடம்' எனவும், 'களர்அனையர் கல்லாதவர்' எனவும், 'கல்லாதவளின் வயிறு களர் நிலத்திற்கு ஒப்பானது' எனவும், 'கற்பதற்கான காலமாக இளமைப் பருவமும்' கருதப்பட்டன. இத்தகைய கற்றல், கற்பித்தல் காலந்தோறும் எப்படிக் கடந்து வந்திருக்கிறது என்பதைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கல்வி

ஒரு மனிதன் தன் கற்றலின் மூலம் அறிவை விரிவு செய்தல், தெளிவடைதல், தன்னுடைய திறமைகளை வளர்த்துக் கொள்ளுதல், தன்மதிப்பு, நம்பிக்கையை வளர்த்தல் மற்றும் சிறந்த பழக்கவழக்கங்களைக் கையாளுதல், தனது சமூகத்தை வழிநடத்துதல் போன்ற செயல்களைச் செய்தலே சிறந்த கல்வியாகும்.

"**கல்** என்ற சொல்லுக்குத் **தோண்டு** என்பது பொருள். கிழங்கைக் கல்லி (தோண்டி) எடுத்தல் - என்பது தமிழர்களின் பேச்சு வழக்காகும். அதுபோல மனிதனின் உள்ளத்தில் மறைந்திருக்கும் மனிதப் பண்புகளை, நாகரிகத்தை, கலையை, கலாச்சாரத்தை, அன்பை, பண்பைத் தோண்டி வெளிக்கொணர்ந்து அதை அனைவர்க்கும் பயன்பட, பகிர்ந்தளிக்கும் வகை செய்வதே கல்வி" என்பர் ஆன்றோர் (எஸ்.இளங்கோவன், 2016).

## கற்றல் கற்பித்தல்

கற்றல் கற்பித்தல் பல்வேறு காரணிகளை உள்ளடக்கியே நிகழ்கிறது. "கடந்த நூற்றாண்டுகளில் கல்வி பற்றிப் பல்வேறு விதமான பார்வைகள் இருந்தன. கல்வி என்பது அறிவு சார்ந்தது (கற்றல் மூளையின் செயல்திறனால் நிகழ்கிறது) அல்லது வளர்ச்சி சார்ந்தது (கற்கும் அனுபவத்தால் அறிவு ஏற்படுகிறது) என்ற இருவேறுவித

பார்வைகள் இருந்தன. இவ்விரு கொள்கைகளைப் பிரித்துப் பார்க்காமல் ஒன்றிணைத்துப் பார்த்தால் கற்றல் முறையில் பல்வேறு வாய்ப்புகள் இருப்பதை உணரலாம். இவற்றை ஒருங்கிணைக்கும்போது பல்வேறு பிற காரணிகளையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

மாணவர்கள் தாங்கள் ஏற்கனவே பெற்ற கல்வி, கருத்துகள் மற்றும் திறன்களை அடிப்படையாகக் கொண்டு கல்வி முறை அமைகிறது. தாங்கள் ஏற்கனவே அறிந்தவைகளோடு புதிய தகவல்களையும் சேர்த்துப் புதிய புரிதல்களை உருவாக்குகிறார்கள்.

இந்த முறையில் கற்பிக்கும் ஆசிரியர் மாணவர்களுக்குப் பயிற்சிகளைக் கொடுக்கிறார். அதனை மாணவர்கள் எவ்வாறு அணுகுகிறார்கள் என்பதைக் கவனித்துத் தக்க ஆலோசனை வழங்கி புதிய முறைகளில் சிந்திக்கத் தூண்டுகிறார். எளிய தகவல்களைச் சொல்லி அதில் மாணவர்களின் எண்ணங்கள் தூண்டப்படும் இம்முறையில் கல்வி அறிவு சிறிதுசிறிதாக அதிகரிக்கப்படுகிறது. வயது முதிர்ந்தோர் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினர்க்கும் இம்முறை ஏற்றதாகும்". (https://ta.vikaspedia.in/education/)

இங்கு ஆசிரியரின் அறப்பணி என்பது பாடங்களை மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வதுதான். பாடத்திட்டம் ஒரு சுருள் போல் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இதன் மூலம் மாணவர்கள் தாங்கள் ஏற்கனவே கற்றுக்கொண்டவற்றிலிருந்து புதியவற்றை அறிவார்கள்.

**கற்பிக்கும் முறை**

ஒவ்வொரு மனிதனின் வாழ்வையும் செதுக்குவதில் இன்றியமையாத பங்கு என்றுமே ஆசிரியர்களுக்கு உண்டு. நல்ல ஆசிரியர்கள் நல்ல மாணவர்களைத் தோற்றுவிப்பதோடு மட்டுமல்லாமல் நல்ல சமூகத்தையும் தோற்றுவிக்கின்றனர். நல்ல ஆசிரியர்கள் இல்லாத சமூகம் நிச்சயம் நல்லதொரு சமூகமாக இருக்க முடியாது. நல்ல கருத்துகளையும் பண்புகளையும் மாணவர்களுக்கு ஊட்டி அதன் வாயிலாக அவர்களை நெறிப்படுத்தி அவர்களின் வாயிலாகவே சமூகத்தினைச் சீர்படுத்தும் அளப்பரிய அறப்பணியைச் செய்பவர்கள் ஆசிரியர்கள். அத்தகைய அறப்பணியினைச் செய்யும் ஆசிரியர்களைக் குறித்தும் அவர்கள் எவ்வாறு கற்பிக்க வேண்டும் என்பது குறித்தும் தமிழ் இலக்கிய இலக்கணங்கள் சில கருத்துக்களைக் முன்வைக்கின்றன. அவை பின்வருமாறு,

கற்பித்தல் என்பது உண்மையில் கற்பித்தலின் நுட்பங்களைக் கூறுவதாகும். நவீனகாலக் கல்விமுறையில் கல்வி கற்பிக்கும் இடம், சூழல், நேரம், பாடக்குறிப்புத் தயாரித்து ஆயத்தமாதல், உளவியல் நோக்கோடு மாணவர்களின் மனநிலையை அறிந்து முகமலர்ச்சியோடு கற்பித்தல், ஆகிய நுட்பங்கள் ஆசிரியர்களுக்குப் பயிற்சிகளாக அளிக்கப்படுகின்றன. இத்தகைய நுட்பங்களைக் கற்றபின்னரே ஒரு ஆசிரியர் மாணவர்களுக்குக் கற்பிக்கின்றார். என்பதை,

> "ஈதல் இயல்பே இயம்பும் காலைக்
> காலமும் இடனும் வாலிதின் நோக்கிச்
> சிறந்துழி இருந்துதன் தெய்வம் வாழ்த்தி
> உரைக்கப் படும்பொருள் உள்ளத் தமைத்து
> விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
> கொள்வோன் கொள்வகை அறிந்தவன் உளம்கொளக்
> கோட்டமின் மனத்தின்நூல் கொடுத்தல் என்ப" (நன்னூல்.எழுத்து36)

பவணந்தி முனிவரின் நன்னூல் தெளிவாக விளக்குகிறது.

## கற்றல் முறை

மாணவர்கள் பாடங்கேட்கும் முறை குறித்து நன்னூல் பின்வருமாறு விளக்குகிறது. கற்கும் மாணவன், ஆசிரியர் சொன்ன நேரத்தில் வருதல், வந்ததும் அவரை வணங்குதல், வெறுப்பில்லாதவனாய் ஆசிரியரின் இயல்பறிந்து நடந்துகொள்ளுதல், ஆசிரியரின் குறிப்புணர்ந்து மாணவன் செயல்படுதல், இந்த இடத்தில் அமர்ந்துகொள் என்று அவர் கூறிய பிறகே அமர்ந்துகொள்ளுதல், படி என்று அவர் சொல்லியபிறகே பாடத்தைப் படித்தல், தாகம் கொண்டவன் தண்ணீரைக் கண்டதும் எப்படி ஆர்வத்துடன் பருகுவானோ அப்படிப் பாடத்தில் ஆர்வம் மிகுந்தவனாக மாணவன் இருத்தல், சித்திரப்பாவையைப் போல ஆசிரியர் முன் அடக்கத்துடன் இருத்தல், ஆசிரியர் நடத்தும் பாடத்தைக் கேட்கும்போது மாணவனுக்குக் காது வாயாகவும், மனம் வயிறாகவும் இருத்தல், முதல் நாள் ஆசிரியரிடம் கேட்டவற்றில் ஐயங்கள் இருப்பின் மீண்டும் கேட்டுத் தெரிந்துகொள்ளுதல், பலமுறை கேட்டுத் தெளிந்தவற்றை மனத்தில் பதியவைத்தல், போகலாம் என ஆசிரியர் சொல்லிய பிறகே வகுப்பு முடிந்து மாணவன் போதல் போன்ற நற்பண்புகளோடு கற்க வேண்டும் என்கிறது நன்னூல். இதனை,

> "கோடல் மரபே கூறுங் காலைப்
> பொழுதொடு சென்று, வழிபடல் முனியான்,
> குணத்தொடு பழகி, யவன் குறிப்பிற் சார்ந்து,
> இருவென இருந்து, சொல்லெனச் சொல்லிப்
> பருகுவன் அன்ன ஆர்வத்தன் ஆகிச்,
> சித்திரப் பாவையின் அத்தகவு அடங்கிச்,
> செவிவாய் ஆக நெஞ்சுகளன் ஆகக்
> கேட்டவை கேட்டு, அவைவிடாது உளத்தமைத்துப்,
> போவெனப் போதல், என்மனார் புலவர்" (நன்னூல். எழுத்து.40)

## ஆதிகாலத்தில் கற்றல் கற்பித்தல்

மொழி என்பது மொழியப்படுவதால் மொழி ஆயிற்று. நம் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தும் கருவி மொழி. பண்டைய காலத்தில் மனிதன் கையினால் சைகை செய்து தன் மனக்கருத்துக்களை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தினான். காலப்போக்கில் ஒலிகளையும், சைகைகளையும் அதற்குரிய பொருள்களையும் பயன்படுத்தினான். முதலில் பேச்சு மொழி தோன்றி பின்னர் அம்மொழி பேசும் மக்கள் எழுத்துக்களையும் பின்னர் சொற்களையும் உருவாக்கினர். சொற்கள் வாக்கியங்களாக மாறின, வாக்கியங்கள் கருத்துத் தொகுப்பாக மாறின, இவ்வாறு மொழி தோன்றியது.

"சிந்துவெளி எழுத்துக்கள் என்பவை இரண்டாம் தமிழ்க் கழகக் காலத்தில் தமிழர்களால் இசைத் தமிழ் அமைப்பு நோக்கி அசை எழுத்துகளாக அமைக்கப்பட்டவை. இவை, முதல் தமிழ்க் கழகக் காலத்தில் நிலவிய ஓவிய எழுத்திலிருந்து வளர்ச்சியடைந்தவை. தமிழ்நாட்டுக் குகை ஓவியங்களிலும் மட்பாண்ட ஓடுகளிலும் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவற்றிலிருந்தே கி.மு.1700-1900 கால அளவில் தமிழ் பிராமி என்னும் தமிழ் எழுத்தை மூன்றாம் தமிழ்க் கழகப் புலவர்கள் உருவாக்கினர் என்பர் இரா.மதிவாணன் (2017:6).

மொழிநூல் ஆய்வாளர்கள் தமிழ் 20ஆயிரம் ஆண்டுப் பழமை உடையது என்கின்றனர். பேச்சுமொழி தோன்றியதும் எழுத்துமொழி தோன்றியிருக்கும். எழுத்தின்

வரிவடிவங்களும், பின்னர் சொல் வடிவங்களும் தோன்றியிருக்கும். தமிழின் எழுத்துமுறை வட்டெழுத்திற்கு முன்பு தமிழி எழுத்து முறையாக இருந்திருக்கும் என்பது மொழியியலாளர் கருத்து. அவ்வாறு மொழி தோன்றிய பின்னர் இலக்கிய, இலக்கணங்கள் தோன்றின. அந்த இலக்கிய இலக்கணங்களைக் கற்றறிந்தோர் அடுத்த இளைய தலைமுறை மாணவர்களுக்குக் கற்பித்தனர். இந்தக் கற்றல், கற்பித்தல் என்பது குருகுலக் கல்வி போன்றோ, மெக்காலேக் கல்வி போன்றோ இருந்திருக்க அன்றைய காலத்தில் வாய்பில்லை. ஆகையால், கற்பிப்போர் தம் எண்ணக் கருத்துகளைப் பாறைகளில் ஓவியமாகவோ, மட்பாண்டங்களில் குறியீடாகவோ, ஓலைச்சுவடிகளில் எழுத்துகளாகவோ பதிவுசெய்திருக்கலாம். கற்போர் அந்த ஓவியங்களை, குறியீடுகளை, எழுத்துகளைப் பார்த்து தம் எண்ணக் கருத்துகளோடு கூட்டிப் பொருள்கொண்டு கற்றிருக்கலாம்.

**குருகுலத்தில் கற்றல் கற்பித்தல்**

குருகுலத்தில் கற்றல் முறை என்பது மாணவர்கள் ஆசிரியரின் வீட்டுக்குச் சென்று பல ஆண்டுகள் தங்கி அவருக்குத் தேவைப்படும் பணிகளைச் செய்து கல்வி கற்றனர். குருகுலக் கல்வி முறையானது வேதகாலத்திலிருந்தே இருந்து வருகிறது. உபநிடதங்கள் பல குருகுலங்களைப் பற்றிக் கூறுகிறது. யாக்ஞவல்கியர், வசிட்டர், வியாசர், வாருணி போன்ற குருக்கள், குருகுலங்கள் நடத்தி வந்ததை உபநிடதங்கள் விரிவாகக் கூறுகிறது. 8 முதல் 12 வயதிற்குள் குழந்தைகளுக்கு உபநயனம் எனும் சமயச் சடங்கு செய்து முடித்த பின்பே குருகுலத்திற்குத் தங்கள் குழந்தைகளைக் கல்வி கற்க அனுப்புவர். கல்வி பயின்று முடியும் வரை மாணவர்கள் திருமணம் செய்து கொள்ளாமல் பிரம்மச்சர்ய விரதம் கடைபிடிக்க வேண்டும். குருகுலத்தில் கல்வி கற்கும் குறைந்தபட்ச காலம் 12 ஆண்டுகளாகும். குருவின் அருகில் அமர்ந்து செவிவழியாகக் கேட்டறிந்த அரிய பெரிய தத்துவ விளக்கங்களை, உபநிடதங்களைப் பின்னாளில் தான் குருவாக மாறி, தனது மாணவர்களுக்குக் கடத்திவந்தனர்.

வேத வேதாந்த சாத்திரங்கள், வேதங்கள், உபவேதங்கள், யோகா, தர்க்கம், அரசியல், அரச தந்திரம், இதிகாசம், புராணம் மற்றும் சோதிடம், வானவியல், ஆயுர்வேத மருத்துவம் மற்றும் பொது அறிவு போன்ற பல கலைகளைக் குரு, சீடர்களுக்குக் கற்றுக்கொடுத்தனர். இவைகள் தவிர ஐம்புலன்களை அடக்கி, விவேகம், வைராக்கியம், ஆத்ம ஞானம் போன்ற உயர் கல்விகளும் குரு, சீடர்களுக்குக் கற்றுக்கொடுத்தனர். (https://ta.wikipedia.org/wiki/).

"ஆங்கிலேய முறைக் கல்வி இந்தியாவில் தொடங்கிய பின்பு வேதகால குருகுலங்களின் எண்ணிக்கை விரல் விட்டு எண்ணும் அளவிற்குக் குறைந்துவிட்டது. இருப்பினும் அரித்வார், ரிஷிகேஷ், காசி, புனே, சென்னை, கோவை, உத்தரகாசி போன்ற இடங்களில் வேதக் கல்வி மற்றும் வேதாந்தக் கல்வி இன்றளவிலும் குருகுலத்தில் கற்றுத் தரப்படுகிறது. சுவாமி தயானந்தர் - ரிஷிகேஷ், சுவாமி குருபரானந்தர் - உத்திரமேரூர், சுவாமி பரமார்த்தனந்தர் - சென்னை, சுவாமி ஓங்காரனந்தர்-தேனி". (https://ta.wikipedia.org/wiki/)

குருகுலக் கல்வி இயங்கிய காலத்தில், இறைநிலை, அதாவது மோட்சம் அடைவது கல்வியின் தலையாய நோக்கமாயிருந்தது. வேதங்களைக் குருவழியாகக் கற்று அவற்றின் வழிநடப்பதே மோட்சம் அடையும் வழி; மோட்சமே வாழ்வின் இறுதிப் பயன் என வலியுறுத்தப்பட்டது. வாழும் வகை, முறை, நெறி, நோக்கம், பயன் முதலிய அனைத்தும் கல்வியின் வழி பெறுவதையே கற்றலின் நோக்கமாகக் கொண்டிருந்தனர்.

ஆக, குருகுலத்தில் கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்கள் தங்கள் தேவைகளை அல்லது வேலைகளைக் கற்றுக்கொள்ள வந்திருக்கும் மாணவர்கள் மூலம் பூர்த்திசெய்துகொண்டனர். மாணவர்கள் ஆசிரியர் இருக்கும் இடம் தேடிச்சென்று அவர் சொல்லும் அத்துணை வேலைகளையும் செய்துமுடித்துக் காரியத்தில் கண்ணாய் இருந்து கற்றிருக்கிறார்கள் என்றால் அன்றைய காலத்தில் கல்வி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்துள்ளது என்பதை நாம் உணரமுடிகிறது.

**தொல்காப்பியர் காலக் கற்றல் கற்பித்தல்**

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து எனத் தொடங்கும் தொல்காப்பியத்தின் சிறப்புப்பாயிரம் முதலே கல்வியின் முக்கியத்துவம் புலப்படத் தொடங்குகிறது. முதலில் தமிழக எல்லையைக் கூறிய பனம்பாரனார் வழக்கின்கண்ணும் செய்யுளின்கண்ணும்; எழுத்து, சொல், பொருள் என்னும் மூவிலக்கணத்தையும் ஆராய்ந்து செந்தமிழ் நில வழக்குடன் தான் நூலியற்றக் காரணமான முதல்நூல் கூறியவற்றைக் கண்டு அவற்றை முறைப்படி ஆராய்ந்த தொல்காப்பியர் நூல் செய்ததாகக் கூறுகிறார்.

அறிவார்ந்த நூல்களைக் கற்று கல்வியில் வல்லவராய் திகழ்பவரால்தான் நூல் இயற்றப்பட்டது என்பதனைத் தொல்காப்பியர் காலச்சூழல் தெளிவுபடுத்துகின்றது.

**ஆசிரியரும் மாணாக்கரும்**

"ஈவோன் தன்மை யீத லியற்கை
கொள்வோன் தன்மை கோடன் மரபு" (தொல்.சிறப்.நச்.உரை - ப.2)

என்பதால் ஆசிரியரை ஈவோன் என்றும் அவர் கற்றுத்தரும் கல்வியைக் கற்றுக் கொள்வதால் மாணவரைக் கொள்வோன் என்றும் தொல்காப்பியம் கூறுகிறது.

ஈவோரைக் கற்கப்படுவோர், கற்கப்படாதோர் என இருவகையாகப் பகுப்பர். கற்கப்படுவோருக்கு உவமையாக மலை, நிலம், பூ, துலாக்கோல் ஆகியவையும் கற்கப்படாதோருக்கு உவமையாக கழற்பெய்குடம், மடற்பனை, முடத்தெங்கு, குண்டிகைப் பருத்தி ஆகியவையும் கூறப்படுகின்றன.

கொள்வோனைக் கற்பிக்கப்படுவோர் என்றும் கற்பிக்கப்படாதோர் என்றும் இருவகையாகப் பகுப்பர். கற்பிக்கப்படுவோரைத் தன்மகன், ஆசான்மகன், பொரு நனி, கொடுப்போன், வழிபடுவோன், உரைகோளன் என ஆறு வகையாகவும்; கற்பிக்கப்படாதோரை மடி, மானி, பொச்சாப்பன், காமுகன், கள்வன், அடுநோய்ப்பிணியாளன், ஆறாச்சினத்தன், தடுமாறு நெஞ்சத்தவன் என எண் வகையாகவும் பகுப்பர். கற்பிக்கப்படுவோருக்கு அன்னம், கிளி, நெய்யரி, போன்றவற்றையும் கற்பிக்கப்படாதோர்க்கு குரங்கெறிவிளங்காய், எருமை போன்றவற்றையும் உவமையாகக் கூறப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

**ஆசிரியர் இலக்கணம்**

ஆசிரியருக்குப் பல உவமைகள் கூறிய தொல்காப்பியம் 'ஈதலியல்பே' என்று தொடங்கும் நூற்பாவின் மூலம் ஆசிரியர் பாடம் கூறும் இயல்பை விளக்குகிறது.

"பழிப்பில் பல்லுரை பயின்ற நாவினன்
புகழ்ந்த மதியிற் பொருந்தும் ஓரையில்
தெளிந்த அறிவினன்" (தொல்.சிறப்.நச்.உரை - ப.3)

என்பதால் தான் கூறக்கருதும் பொருளின் பல்வேறு பரிமாணங்களையும் உணர்ந்து மாணவர் புரிந்து கொள்ளும் வகையில் தக்க உவமை, உவமேயங்களுடன் கூற வேண்டும் என்கிறது. மேலும் மாணவனது அறிவுத்திறன் அவன் புரிந்து கொள்ளும் முறை ஆகியவற்றை அறிந்து ஏற்றுக்கொள்ளும் வகையில் ஓர் மனநல மருத்துவர் போல் ஆசிரியர் பாடம் கற்பிக்கும் முறையும் தொல்காப்பியர் காலத்தில் செம்மையுற இருந்தமையை இதன் மூலம் நாம் அறியமுடிகிறது.

## மாணாக்கர் இயல்பு

மாணாக்கர் ஆசிரியர் கூறிய காலத்தில் குறித்த இடத்திற்கு உரிய நேரத்தில் சென்று கல்வி கற்கும் ஆர்வம் மிக்கவராய் இருத்தல் அவசியம் என்று கூறுவதோடு அவன் 'அன்பொடு பழகினான்' என்றும் தொல்காப்பியர் கூறியதால், ஆசிரியரிடம் மாணவர்கள் அன்போடு எளிமையாகப் பழகிய இயல்பும் அதன் மூலம் தனது ஐயங்களைக் கேட்டுத் தெளிவடைந்து கொண்ட இயல்பும் இருந்தமையை அறிய முடிகிறது.

உயர்திணை, அஃறிணை என்று உலக உயிர்களைப் பிரித்த தொல்காப்பியர் உயர்திணைக்குரியோராக ஆடூஉ, மகடூஉ, பலர் ஆகியோரைக் கூறினார். கல்வி என்பது மக்களுக்குப் பொது. ஆனால் தொல்காப்பியர் 'பெருமையும் உரனும் ஆடூஉமென' என்பதால் கல்வியில் பெண்களை ஒதுக்கிவிட்டு ஆண்களுக்கு மட்டுமே சிறப்பிடம் தந்துள்ளார். பெருமிதம் என்பதன் மெய்ப்பாட்டு வாயிலாகக் "கல்வி, தறுகண், இசைமை. கொடையெனச் சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே"(தொல்.மெய்.நூற்.9) எனத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளமை இங்கு நோக்கத்தக்கது. பெண்களுக்குக் கல்வி அக்காலத்தில் வழங்கப்படவில்லை என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

"ஓதல் பகையே தூதிவை பிரிவே" (தொல்.அகத்.நூற்.25) என்று பிரிவின் வகைகளைக் கூறிய தொல்காப்பியர் ஓதலும் தூதும் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்ற நால்வகையோரிலும் உயர்ந்தோர்க்குரியனவாகவும் 'உயர்ந்தோர்க்குறிய ஒத்தினான' என்பதின் மூலம் பின்னோரில் உயர்ந்தோராகிய வணிகருக்கும் ஓதுதல் நிமித்தமாகப் பிரியும் பிரிவு உண்டு என்பதாலும் அக்கால வருணாசிரம முறைப்படி அறிய முடிகிறது. "கீழ்ப்பால் ஒருவன் கல்வி கற்பின் மேற்பால் ஒருவனும் அவன் கண்படுமே"(புறம்.183) என்ற நிலை தொல்காப்பியர் காலத்தில் இல்லை என்பது தெரிய வருகிறது.

தொல்காப்பியர் காலத்தில் குருகுல வழியில் கல்வி போதிக்கப்பட்டமையும் தொல்காப்பியம் வழி அறியமுடிகிறது. தொல்காப்பியத்தில் கல்விக்குரிய காலமாக மூன்றாண்டுகள் கூறப்பட்டுள்ளன. பெருமிதம் தோன்றும் வாயிலாகவும்; நகை தோன்றும் வாயிலாகவும் கல்வி கூறப்படுகின்றது. 'கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு'(ஔவையார் தனிப்பாடல்) என்ற நிலையில் பெண் கல்வி மற்றும் வேளாளர் கல்வி பற்றித் தொல்காப்பியத்தின் வழி அக்காலச் சமுதாயச் சூழலைத் தெறிந்துகொள்ள முடிகிறது.

## சங்ககாலத்தில் கற்றல் கற்பித்தல்

சங்க காலத்தில் கல்வி பெரிதும் சிறப்பித்துப் பேசப்பட்டுள்ளது. ஆனாலும், சங்க காலத்தில் வழக்கிலிருந்த கல்வி அமைப்புப் பற்றியும் கல்விமுறை பற்றியும் அறிந்துகொள்ள உதவும் நேரடிச் சான்றுகள் சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. சங்ககால சமுதாய அமைப்பில் கல்விக்குப் பொறுப்பேற்று இருந்தவர்களுள் புலவர்களும் பாணர்களும் குறிப்பிடத் தகுந்தவர்கள் ஆவார். சங்க நூல்கள் வாயிலாகப் பண்டையத் தமிழகத்தில் வாழ்ந்த புலவர்களின் கல்வியறிவு, அவர்களின் புகழ் போன்றவற்றை அறியமுடிகிறது. பாண்டியர்கள் தலைசிறந்த புலவர்களை ஒன்றுசேர்த்து தமிழ்க் கழகம்

நிறுவினர். புலவர்களின் பாடல்களும், நூல்களும் தமிழ்க் கழகத்தால் குற்றமற்றவை என ஒப்புக் கொள்ளப்பட்ட பிறகு மக்களிடையே வழங்கப்பட்டது. பொதுவாகக் கல்வியின் பெருமையறிந்து மதித்துக் கொடுக்கும் பொருளையே புலவர் விரும்பினர். அதியமான் நெடுமானஞ்சி பரிசில் கொடுக்காமல் காலம் கடத்தியதைக் கண்ட அவ்வையார் கோபம்கொண்டு "எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே"(புறம்.206:13) என்று முழங்கிப் பாடுகிறார். சங்ககாலச் சமுதாயத்தில் கல்வி கற்றவர்களுக்கு மிகுந்த மதிப்பு இருந்தது. கல்வி கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்ற பெருமை இருந்தது. கல்வி கற்ற ஒருவன் கீழ்க் குலத்தவனாயினும் முயற்சி பெறுவான். இவ்வாறு அமையும் கல்விச் சிறப்பினை,

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலைமுனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன உடன் வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே" (புறம்.183:1-10)

என்ற புறநானூற்றுப் பாடலில் ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் என்ற மன்னன் புலப்படுத்தியுள்ளார். பெற்ற தாய்க்குத் தன் பிள்ளைகள் அனைவரிடத்திலும் அன்பு உண்டு என்றாலும் கல்வியில் சிறந்தவர் மீது மிகுந்த அன்பு பாராட்டுவாள். இப்பாடலைப் பாடிய மன்னன் வீரத்திற்கு முக்கியத்துவம் தராமல் கல்விக்கு முக்கியத்துவம் தந்திருக்கிறான் என்றால், கல்வி எந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக சங்க காலம் இருந்துள்ளது என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும்.

மேலும் "கற்பித்தான் நெஞ்சழுங்கப் பகர்ந்துண்ணான் விச்சைக்கண், தப்பித்தான் பொருளேபோல் தமியவே தேயுமால்"(கலித்.149:4-5) எனும் கலித்தொகைப் பாடலடிகள் அக்காலத்தில் ஆசிரியர் நன்கு மதிக்கப்பட்டதையும் கற்ற மாணவர்கள் ஆசிரியருக்குச் செய்ய வேண்டிய கடமையையும் எடுத்துக் கூறுகின்றது என்றால் கற்பித்தோர் அறப்பணி செய்திருக்கிறார்கள், கற்றவர்கள் கடமையுணர்வோடு வாழ்ந்திருக்கிறார்கள் என்பதைச் சங்ககால நூல்கள் வழி அறியமுடிகிறது.

**சங்கம் மருவிய காலத்தில் கற்றல் கற்பித்தல்**

சங்கம் மருவிய காலத்தில் "தமிழகத்தில் பிராமணர் குடியேற்றமும் அவர்களுக்கு வேதங்களைக் கற்பிக்கும் காலமும் தோன்றியது. பிராமணர்கள் பல சலுகைகளைப் பெறத் துவங்கினர்" (N.Subrahmanian, 1989). இந்தக் காலக் கட்டத்தில் பொதுமக்கள் மத்தியில் இருந்த பெண்களின் கல்விநிலை வீழ்ச்சி அடைந்தது. "சாதி ரீதியாகக் கல்வி மறுக்கப்பட்டதை மனுஸ்மிருதி உத்தரவுகள் கூறுகின்றன, அதன்படி பிராமணர் சூத்திரர்களுக்குக் கற்பித்தால், அவர் நரகத்தில் வீழ்வார், சூத்திரர் வேதத்தைக் கேட்டால் அதற்குத் தண்டனையாக அவன் காதுகளில் ஈயத்தை உருக்கி ஊற்ற வேண்டும். பழுக்கக் காய்ச்சிய எழுத்தாணியைக் கொண்டு அவனது நாவில் சூடு இடவேண்டும் என்பன போன்ற ஒடுக்குமுறைகள் கல்வி கற்பதற்கு எதிராகத் தோன்றின" (S.N.Sadasivan, 2000)

சங்கம் மருவிய காலத்தில் பல்லவர் பிராகிருதத்தையும், சமசுகிருதத்தையும் ஆதரித்தனர். அவர்கள் சமசுகிருதப் பள்ளிகளைக் காஞ்சியிலும், சிலவற்றைப் புதுச்சேரியிலும்

நிறுவினர். இவை தமிழகத்திலும் தென்னகத்தின் பிற பகுதியிலிருந்தும் மாணவர்களைக் கவர்ந்தன.

பல்லவர் காலத்தில் தமிழகத்தில் சமண சமயத்தின் தாக்கம் கூடுதலாக இருந்தது. தமிழகமெங்கும் பரவலாக சமணத் துறவிகள் வாழ்ந்து வந்தனர். இத்துறவிகள் ஓய்வு எடுப்பதற்குப் பாறைக் குன்றுகளிலும், குகைகளிலும் கல்லில் படுக்கைகளை வெட்டி வைத்திருந்தனர். பள்ளிகொள்ளும் அந்த இடம் பள்ளி எனப்பட்டது. அந்த இடங்களில் அவர்கள் மாணவர்களுக்குக் கல்வியும் போதித்தனர். இந்தப் பள்ளிகளில் துவக்கத்தில் சமயக் கருத்துகளும், பின்னர் அறநெறிகளும் போதிக்கப்பட்டன. எழுத்தறிவும் இந்தப் பள்ளிகளில் பயிற்றுவிக்கப்பட்டது. அதனால்தான் மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் இடம் பள்ளி என்று பின்னாளில் பெயர் வந்தது.

"நாயக்கர் காலத்தில் நாடெங்கும் பிராமணக் குழந்தைகள் வேதங்கள் ஓதி பயிற்சி பெறுவதற்குச் சமஸ்கிருதப் பாடசாலைகள் அரச மானியத்தோடு இயங்கின. ஓணர் என்ற நகரில் ஆண்களுக்கு 23 பள்ளிகளும் பெண்களுக்காக 12 பள்ளிகளும் நடத்தப்பட்டன" (அறவாணன் க.ப, 20113, ப.159) இப்பதிவினை நோக்குங்கால் இன்று தமிழகத்தில் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ஆண்கள் கல்லூரி, பெண்கள் கல்லூரி எனத் தனித்தனியாகக் கல்வி நிறுவனங்கள் இருப்பதற்கு நாயக்கர் காலமே அடிகோழாய் இருந்திருக்கிறது என்பது தெரிய வருகிறது.

கல்வி சார்ந்து தமிழகத்து மாணாக்கர்களின் மானத்தையும் உயிரையும் பறிக்கும் நுழைவுத்தேர்வை நாயக்கர் காலத்தில் பிராமணர்கள்தான் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதற்குக் கீழ்வரும் பகுதி சான்று பகரும். "தருணம் தடக்கன் எனும் அரசன் கடிகை (பள்ளி) ஒன்று நடத்தினான். மாணவர் விடுதியும் இணைந்திருந்தது. 95 மாணவர்கள் பயின்று வந்தனர். வியாக்கரணம், மீமாம்சை, புரோகிதம், திரைராஜ்ஜிய விவகாரம் ஆகிய பாடங்கள் நடத்தப்பெற்றன. நுழைவுத்தேர்வில் வெற்றிபெற்ற பிராமண இளைஞர்கள் மட்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அக்கல்லூரி தென்திருவிதாங்கூரில் இருந்த பார்த்திபசேகரபுரம் எனும் ஊரில் அமைக்கப்பட்டிருந்த திருமால் கோயிலில் செயல்பட்டது"(இராஜேந்திரன்.ந, 2019, பக்.73-74, திறனாய்வு நோக்கில் க.ப.அறவாணனின் தமிழ் மக்கள் வரலாறு - நாயக்கர் காலம்).

மனித வாழ்வில் கற்றலும் கற்பித்தலும் எவ்வளவு முக்கியம் என்பதை வள்ளுவர் கற்றல் பற்றிய செய்திகளை அரசியல் என்னும் பகுதியில் உரைக்கிறார். காரணம், அரசன் கற்றிருந்தால்தான் அவன் ஆட்சிக்கு உட்பட்ட மக்களும் கல்வி கற்பார்கள், அரசனும் தம் மக்களுக்குக் கல்வி அறிவை ஊட்டுவான் என்ற நோக்கில் அமைத்துள்ளார். மேலும், அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று அதிகாரங்களிலும் கல்வி பற்றிய செய்திகளைச் சுட்டிச்செல்கிறார்.

"எண்ணும், எழுத்தும் நாம் வாழும் வாழ்க்கைக்குக் கண்களைப் போன்றன(391) எனக் கல்வியின் எல்லையைச் சுட்டிய வள்ளுவர், கல்லாமை பற்றிக் கூறும்போது கற்றவர்களுடன் கல்லாதவர்களை மக்களோடு(மக்களுக்கும்) விலங்குகளுக்குமான வேறுபாடு(410) என்று உரைக்கிறார். செல்வங்களுள் தலைசிறந்த செல்வம் கேள்விச் செல்வம்(411) என்றும் கற்காவிட்டாலும் கேட்டறிய வேண்டும், அது தளர்ச்சியுற்றபோது ஊன்றுகோலாகும்(414) என்றும் உரைக்கிறார். அறிவுடையாரே எல்லாம் உடையார், அறிவிலார் வேறு என்ன உடையவராக இருந்தாலும் அவர் ஏதுமற்றவரே என்றும் நுவல்கிறார். இவ்வாறு கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை ஆகிய அதிகாரங்கள் கற்றல் கற்பித்தல் சார்ந்த பரந்த பார்வையை நல்குகின்றன" என்கிறார் இரா.குணசீலன் (2018:76-77).

"கற்க கசடற கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக" (குறள். 391)

எனும் குறளுக்கு மு.வரதராசன் அவர்கள் 'கற்கத் தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்கவேண்டும். அவ்வாறு கற்ற பிறகு, கற்ற கல்விக்குத் தக்கவாறு நெறியில் நிற்கவேண்டும்' என்கிறார். நாம் பெற்ற கல்வியானது வெறுமனே ஒரு அறிவாக நிலைத்துவிடாது அதனை நமது வாழ்க்கையில் பின்பற்றினோமேயானால் நம் வாழ்வு மேன்மையடையும் என்பதை வள்ளுவர் வழி அறிந்துகொள்ள முடிகிறது.

**நாலடியார் கூறும் கற்றல் கற்பித்தல்**

"குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே யழகு" (நாலடி.131)

என்கிறது நாலடியார். ஒரு பெண்ணுக்குக் கூந்தல் கருமையாக நீண்டு வளர்ந்து அழகாகத் தோன்றலாம், மஞ்சள் பூச்சால் அவள் மேனி அழகாகத் தோன்றலாம் ஆனால், அவை யாவும் அழகல்ல! ஒரு பெண் கல்வி கற்பதனால் அவள் நெஞ்சத்துள் நல்ல பண்புகள் வளரும், அந்த நல்லொழுக்கப் பண்புநிலை உருவாதல்தான் ஒரு பெண்ணுக்கு அழகு என்கிறது மேற்குறித்த இப்பாடல்.

"குஞ்சி அழகு, கொடுந்தானைக் கோட்டழகு, மஞ்சள் அழகு என்னும் தொடர்களை ஓர் ஆணுக்குப் பொருத்திப் பொருள் கூறுவது பொருந்தாது. எனவே, இப்பாடல் பெண்கல்வியைச் சிறப்பித்துக் கூறுகிறது எனக் கருதுவதே ஏற்புடையதாகும்" என்கிறார் கோ.வெங்கடகிருஷ்ணன் (2008:1007). "சமணர்கள் பெண்கல்வியைப் போற்றியதில்லை என்று சில அறிஞர்கள் மறுக்கலாம். ஆனால், நாலடியாரின் அனைத்துப் பாடல்களுமே சமணர்களின் பாடல்கள் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. பெண்கல்வி பற்றிய தமிழர்களின் பழமையான சிந்தனை இது என்று நாம் பெருமை கொள்வதே பொருத்தமாகத் தோன்றுகிறது" என்கிறார் கோ.வெங்கடகிருஷ்ணன் (2008:1007-1008)

அழகு என்பது உண்மையில் வெளித்தோற்றத்தில் இல்லை. நெஞ்சத்துள் உள்ள நல்ல பண்பே அழகாகும். அதற்குக் கல்வி தான் அடிப்படைக் காரணமாக அமைகின்றது. எனவே, கல்வி கற்ற பெண்கள் அழகான பெண்கள் என்ற தெளிவான சிந்தனையை பாடல் நமக்குத் தெளிவுபடுத்துகின்றது.

ஒரு மனிதன் கற்க நினைத்தால் சாகும் வரை கற்கலாம் என்பார் வள்ளுவர். அதிலும் கசடறக் கற்க வேண்டிய நூல்களைக் கற்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தும் பாடல் நாலடியாரிலும் இடம்பெற்றுள்ளது. அப்பாடல் கீழ்வருமாறு,

"கல்வி கரை யில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல, தெள்ளிதின்
ஆராய்ந்து அமைவுடைய கற்பவே, நீர் ஒழியப்
பால் உண் குருகின் தெரிந்து" (நாலடி.135)

அதாவது கல்வி கற்பதற்கு வயதே கிடையாது. கற்பவரின் வாழ்நாள் மிகவும் குறைவானது. அந்தக் குறைவான வாழ்நாளில் நோய் பல வந்து, மனிதன் கல்வி கற்க தடையாய் மாறிவிடும் நாட்கள் பலவாகும். எனவே, இத்தகைய குறைந்த நாட்களில் ஒருவன் தெளிவாக ஆராய்ந்து பார்த்துக் கற்க வேண்டிய சிறந்த நூல்களைக் கற்றுத் தேற வேண்டும். அதுமட்டுமல்லாது நூல்களில் சிறந்த கருத்துக்களும் இருக்கும், தேவையற்ற பயன்தராத கருத்தும் இருக்கும். பாலையும் நீரையும் கலந்து வைத்தால்

அன்னப் பறவை எப்படிப் பாலை மட்டும் உண்ணுமோ அதைப்போல ஒருவன் நூலில் சொல்லப்பட்ட தேவையற்ற கருத்துக்களை ஒதுக்கிவிட்டு சிறந்த கருத்துக்களை மட்டும் கற்றுகொள்ள வேண்டும். கல்வி அனைவருக்கும் சமம் என்பதும் பிறப்பின் பயனை அடைவதற்குக் கல்வி முக்கியம் என்பதையும் நாலடியார் போன்ற சங்கம் மருவியகால நூட்கள் எடுத்துரைக்கின்றன.

## இன்றைய சூழலில் கற்றல் கற்பித்தல்

'ஆசிரியர் பணியே அறப்பணி அதற்கே உன்னை அர்ப்பணி', 'எழுத்தறிவித்தவன் இறைவன்' 'நல்ல ஆசிரியனால் நல்ல மாணவர்களையும் நல்ல சமூகத்தையும் உருவாக்க முடியும்' 'ஆசிரியர் பணி என்பது ஒருவருடைய வாழ்வாதாரத்தை உருவாக்கும் பணி' 'ஆசிரியர் உறவே முக்கியமான, முதன்மையான உறவு' 'மனத்தின் அறியாமை இருளைப்போக்கி அறிவுக் கண்களைத் திறந்து வைப்பவர் ஆசிரியர்' இது போன்ற கருத்துக்களைப் படித்ததினாலும், அறிஞர்களின் வாய்ச்சொற்களைக் கேட்டதினாலும் பலர் ஆசிரியர் பணியைத் தேர்ந்தெடுத்து வாஞ்சையோடு பணிசெய்ய வந்துள்ளனர்.

கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்றிருந்த அன்றைய கூற்று இன்று இருக்கிறதா? குறிப்பாக, பள்ளி, கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மதிப்பு இருக்கிறதா? தகுந்த ஊதியம் கிடைக்கிறதா? என்றால் விரல் விட்டு எண்ணும் ஒரு சில பள்ளி, கல்லூரிகள் தவிர புற்றீசலைப் போல் நிறைந்திருக்கும் பள்ளி, கல்லூரிகளில் கேள்விக்குறியாகவே இருக்கிறது.

பள்ளி, கல்லூரிகளில் ஆசிரியர்கள் பாடம் நடத்துவதை விட்டுவிட்டு மாணவர்களின் கல்விக் கட்டணத்தை வசூலித்தல், மாணவர்களின் தரவுகளைச் சேகரிக்கும் பணிசெய்தல், மாணவர் சேர்க்கைக்காக ஊர்ஊராக, பள்ளிக்கூடம் பள்ளிக்கூடமாக அலைதல், அலுவலக உதவியாளராகப் பணிசெய்தல், காவலாளியாகப் பணிசெய்தல், இது போன்ற ஆசிரியர் பணிக்கு எந்தவிதத்திலும் தொடர்பே இல்லாத எண்ணற்ற பணிகளைச் செய்வதினால் ஆசிரியர்கள் என்ன பணிக்காக வந்தார்கள் என்பதையே மறந்து விடக்கூடிய அளவிற்கு அவர்களின் மனநிலை மாறிப்போய்விடுகிறது. இந்த நிலையில் பல ஆசிரியர்கள் மனம் நொந்து விரக்தியில் கடனுக்காகப் பாடம் நடத்திச் செல்கிறார்கள் என்பதுதான் உண்மை. விதிவிலக்கிற்கு ஒரு சில ஆசிரியர்கள் மேலே குறிப்பிட்ட பணிகளைச் செய்வதோடு மணவர்களின் நலன்கருதியோ, மனசாட்சிக்குப் பயந்தோ நன்னூலாரின் கூற்றுக்கு இணங்க அறப்பணி செய்கிறார்கள் என்பதும் உண்மை.

பண்படுத்தாத நிலமும் பக்குவப்படாத விதையும் நல்ல மகசூலைத் தருவதில்லை. அதைப்போல, நல்ல கருத்துக்களைக் கேட்காத மாணவனும், நல்ல ஆசிரியரிடம் பாடம் கேட்காத மாணவனும் இந்தச் சமூகத்தில் நல்ல மனிதன் என்று பெயர் எடுக்க முடியாது. ஏனென்றால், இந்தச் சமூகத்தில் தற்போதைய நிலையில் தீய வழியில் செல்வதற்கும் தீய செயல்களைச் செய்வதற்கும் பல வழிகள் உள்ளன. தீய குணமில்லாமல் மாணவர்கள் நல்வழியில் நடப்பதற்கு ஆசிரியர்கள் அன்றைய காலம் போல் அறப்பணி செய்திட வேண்டும். பள்ளி, கல்லூரிகள் ஆசிரியர்களுக்கு உரிமையையும், மதிப்பையும், தகுந்த ஊதியத்தையும் வழங்கிட வேண்டும்.

நெஞ்சு களனாக, செவி வாயாக இருந்து கேட்ட மாணவர்களின் கற்றல் நிலை எப்போதோ மலையேறிவிட்டது. இன்றைய சூழலில் அரை மணி நேரம் கூட பொறுமையாக இருந்து ஆசிரியர் சொல்லும் பாடத்தைக் கேட்கும் திறன் அற்றவர்களாக இன்றைய மாணவர்கள் மாறிவிட்டார்கள். காரணம் ஒருபுறம் ஊடகம் அவர்களை மழுங்கடித்துக் கொண்டிருக்கிறது. மற்றொருபுறம் திறன்பேசி அவர்களை

அடிமையாக்கிக் கொண்டிருக்கிறது. சில வேளைகளில் உயிரையும் பறித்து விடுகிறது. இந்தச் சூழலில் மாணவர்கள் மீண்டெழுந்து வருவதென்பது மிகக் கடினமான சூழல்தான்.

இந்தக் கொடுமை போதாதென்று பெற்றோர் செய்யும் கொடுமை அதிலும் மோசமானது. கொடுமை 'கொடுமையென்று கோவிலுக்குச் சென்றால் அங்கே இரண்டு கொடுமை தலையை விரித்துப்போட்டு ஆடியதாம்' என்ற பழமொழிக்கு இணங்க தாய்மொழியில் சிந்திக்கக்கூடிய குழந்தையை ஆடம்பரத்திற்காகவும் அந்நிய மொழியின் மோகத்திற்காகவும் தனியார் பள்ளியில் தங்கள் குழந்தைகளைச் சேர்க்கிறார்கள். தனியார் பள்ளிகள் நல்ல பேர் வாங்குவதற்காகக் குழந்தைகளை நன்றாகப் படிக்க வைக்கிறோம், அறிவாளியாக மாற்றுகிறோம் என்ற பெயரில் குழந்தைகளைக் குழந்தையாகப் பார்க்காமல் பொதிமூட்டை சுமக்கும் கழுதையாகவே மாற்றி விடுகிறார்கள். குழந்தைகளின் அறிவுத்திறனை அறியாமல் செய்த இக்காரியத்தால் குழந்தைகள் இளமை பருவத்திலேயே முதுமைப் பருவம் பூண்டு கூனிகளாக மாறிவிடுகிறார்கள் என்பதை,

> "கல்வி இங்கே
> இதயத்தில் சுமக்கும்
> இனிமையாய் இல்லாமல்
> முதுகில் சுமக்கும்
> மூட்டையாகி விட்டது
> கொடுமை
> என்னவென்றால்
> குழந்தைகள்
> எல்லாம் கூனிகளாயின" (ஒரு வானம் இரு சிறகு)

என்கிறார் மு.மேத்தா.

குழந்தை விருப்பத்தோடு விரும்பி உண்ணும் உணவாக இருக்க வேண்டும் கல்வி. குழந்தையை மிரட்டி வாயைத் திறக்கச் சொல்லி திணிக்கப்படும் வேண்டாத உணவு போல் இருத்தல் கூடாது கல்வி. கல்வி விருப்பத்தோடும் எளிமையாகப் புரிந்துகொள்ளும் வகையிலும் மாணவர்கள் வாழ்க்கையில் பயன்படும் வண்ணமும் இருக்க வேண்டும். ஆனால் இன்றைய கற்றலுக்கான சூழல் எப்படி இருக்கிறது என்பதை,

> "அவர்கள் மூளையில்
> விதைகளைப் போல்
> தூவப்பட்ட வேண்டிய அறிவு
> ஆணியைப் போல்
> அறையப்படுகிறது" (இன்னொரு தேசிய கீதம்)

என்கிறார் வைரமுத்து. விதை மண்ணில் தூவப்பட்ட பிறகு அந்த விதைகள் நல்ல மகசூலையும் அல்லது மனிதனுக்குத் தேவையான விளைபொருள்களையும் தரக்கூடியதாகவும் நல்ல வீரியமுள்ள விதையாகவும் அது இருக்க வேண்டும். கல்வியானது மாணவர்களுக்குத் தேவையான நல் அறிவைத் தரக்கூடியதாகவும், சிந்தனையை வளர்க்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். ஒருவேளை கல்வி மாணவர்களின் மனதில் ஆணியைப் போல் அறையப்பட்டால், பசுமையான மரத்தில் ஆணியை அறைந்து வைத்தால் நாட்கள் செல்லச்செல்ல வெயிலிலும் மழையிலும் ஆணி எப்படித் துருப்பிடித்து யாருக்கும் பயனில்லாமல் கீழே விழுந்து மண்ணறித்துப் போகுமோ அதைப்போல மாணவர்களின் மனதில் அறையப்பட்ட கல்வி, தேர்வில் பாஸ்

மார்க் எடுக்க உதவுமே தவிர, இந்தச் சமூகத்தில் சிந்தனையை விளைவிக்கக்கூடிய நல்ல மாணவர்களை அல்லது மனிதர்களை உருவாக்காது.

அதுவே மாணவர்களின் மனநிலையை அறிந்து அவர்களுக்கும் இந்தச் சமூகத்திற்கும் பயன் விளைவிக்கக்கூடிய கல்வியைக் கொடுப்பதே கற்றல் கற்பித்தலின் மிக முக்கியமான கடமையாக இருக்க வேண்டும்.

**துணைநின்றவை**


- அறவாணன் க.ப., 2013, தமிழ் மக்கள் வரலாறு, தமிழ்க்கோட்டம் வெளியீடு, சென்னை-29
- இளங்குமரன் இரா., 2003, சங்க இலக்கியம் புறநானூறு, கோவிலூர் மடாலயம், கோவிலூர் - 307, காரைக்குடி.
- இளங்கோவன் எஸ்., 2016, கல்வி நேற்று இன்று நாளை, http://elangonarasimman.
- இராஜேந்திரன் ந., 2020, திறனாய்வு நோக்கில் க.ப.அறவாணனின் தமிழ் மக்கள் வரலாறு - நாயக்கர் காலம், (மீள் வாசிப்பில் தமிழ் மக்கள் வரலாறு, பாலாஜி.க) வேர்களைத்தேடி பதிப்பகம்.
- குணசீலன் இரா., 2018, (நிற்க அதற்குத் தக) தமிழ் ஆங்கிலம் கணிதம் கற்றல், கற்பித்தல் உத்திகள், தமிழ் நாற்றங்கால் பதிப்பகம், சிவகங்கை - 630 702.
- கணேசையர், 1937, தொல்காப்பியம் எழுத்ததிகார மூலமும் நச்சினார்க்கினியருரையும், கழக வெளியீடு, சென்னை.
- மதிவாணன் இரா., 2017, இடைக்கழகச் சிந்துவெளி எழுத்து படிப்பது எப்படி?, எழிலினி பதிப்பகம், எழும்பூர், சென்னை - 8.
- விசுவநாதன். அ.(உ.ஆ.), 2004, கலித்தொகை (மூலமும் உரையும்), என்.சி.பி.எச் பதிப்பகம், அம்பத்தூர், சென்னை - 98.
- வெங்கடகிருஷ்ணன் கோ., 2008, (நாலடியார் நுவலும் கல்வி) வளர் தமிழ் ஆய்வு மன்றம், திண்டுக்கல்-624 001.
- Subrahmanian N., (1989), The brahmin in the Tamil country, Ennes Publications.
- Sadasivan S.N., (2000), A Social History of India. APH Publishing. p.274.
- http://elangonarasimman.blogspot.com/2016/10/kalvi-andrum-indrum.html
- https://ta.vikaspedia.in/education/ {The book-"GURUKULS AT A GLANCE" by S.P.Arya (Founder of ARYA BROTHERS CARE) and WWW.GURUKULSWORLD.COM as well as WWW.ARYABROTHERS.COM)Cheong Cheng, Cheong Cheng Yin; Tung Tsui Kwok Tung Tsui, Wai Chow King Wai Chow, Magdalena Mo Ching Mok (eds.) (2002). Subject Teaching and Teacher Education in the New Century: Research and Innovation. Springer. பக். 194. பன்னாட்டுத் தரப்புத்தக எண்:962-949-060-9. https://ta.wikipedia.org/wiki/%E0%AE%95%E0%AF%81%E0%AE%B0%E0%AF%81%E0%AE%95%E0%AF%81%E0%AE%B2%E0%AE%AE%E0%AF%8D


******************